**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**

**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>MCOP . No.177/2025</u>**

**<u>நாள் : 12.02.2026</u>**

**ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)-ம் ஆண்டின் 54 வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.எஸ்.இந்திராணி | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.சுந்தரமூர்த்தி | வயது | : | 52 |
| ஊர் | : | தாமலேரிமுத்தூர் | தொழில் | : | அரசு பள்ளி ஆசிரியை |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் 1 ஆம் மனுதாரரும் விபத்தில் இறந்துபோனவரின் மனைவியும் ஆவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் எனக்காகவும், மற்ற மனுதாரர்களுக்காவும் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. முதல் தகவல் அறிக்கை நகல் – ம.சா.ஆ.1

2. சுந்தரமூர்த்தியின் பிரேத பரிசோதனை அறிக்கை நகல் – ம.சா.ஆ.2

3. டாடா மினி லாரி வாகனத்தின் பதிவு சான்றின் நகல் – ம.சா.ஆ.3

4. டாடா மினி லாரி வாகனத்தின் காப்பீடு பாலிசி நகல் – ம.சா.ஆ.4

5. டாடா மினி லாரி வாகனத்தின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் – ம.சா.ஆ.5

6. இறந்த சுந்தரமூர்த்தியின் ஓட்டுநர் உரிமம் நகல் – ம.சா.ஆ.6

7. 1ஆம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் – ம.சா.ஆ.7

8.  2ஆம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்– ம.சா.ஆ.8

9. 3ஆம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்  – மா.சா.ஆ.9

10.4 ஆம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்– ம.சா.ஆ.10

11. இறந்த சுந்தரமூர்த்தியின் ஆதார் அட்டை  நகல் – ம.சா.ஆ.11

12. சுந்தரமூர்த்தியின் இறப்பு சான்றின்  நகல் – ம.சா.ஆ.12

13. இறந்த சுந்தரமூர்த்தியின் வாரிசு சான்றின் நகல் – ம.சா.ஆ.13

14. 2021 அக்டோபர் மாதத்தின் சுந்தரமூர்த்தியின் சம்பள சீட்டு நகல் – ம.சா.ஆ.14

15. சுந்தரமூர்த்தி பணிபுரிந்த அரசு நிறுவனம் வழங்கிய அடையாள அட்டை நகல்– ம.சா.ஆ.15 (மேற்படி ஆவணம் நகல் என்பதால் 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அசலை முன்னிலைப்படுத்திய நிலையில் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சாட்சியிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது)

மனுவில் கோரியபடி தீர்ப்பாக கோருகிறேன்.

(2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.